# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-2 Date : 14.03.2024
Case No. : **O.S.56/2019** Nationality : Indian
Name : செல்வகுமார் (வட்ட சார் ஆய்வாளர் நில அளவை, திருவிடைமருதூர் தாலுக்கா) Religion :
Age : 46
Father's/Husband's Name :
Village :
Taluk :

வா.சா.2

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்காவில் நில அளவை வட்ட சார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது. நீதிமன்ற அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள திருவிடைமருதூர் தாலுக்கா, செ.புதூர் கிராமம் புல எண்கள்.326/36, 326/37, 326/38, 326/39, 326/40 ஆகிய சொத்துக்களுக்கான புல வரைபட பதிவேட்டினை எடுத்து வந்துள்ளேன். **(மேற்படி கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட புல வரைபடம் சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. புல வரைபடத்தில் திருத்தம் செய்ய உத்தரவிடப்பட்டால் அதனை திருத்தம் செய்யக்கூடிய அதிகாரம் நில அளவை துறைக்கு உள்ளது என்றால் சரிதான். மேற்படி கணினி பதிவிறக்கம் செய்யப்பட்ட புல வரைபடமும் கிராம நிர்வாக அலுவலரால் பராமரிக்கப்படும் புலவரைபடமும், ஒரே மாதியாகதான் இருக்கும். புல வரைபடத்தில் உள்ள அளவுகள் படிதான் சிட்டா மற்றும் அடங்கல் ஆவணங்கள் இருக்கும். ஆனால் புல வரைபடத்தில் உள்ள மொத்த புல எண்ணில் அளவினை தீர்மானிக்கும்போது 5 சதவீதம்

கூடுதலாகவோ குறைவாகவோ அனுமதிக்கப்பட்ட பிழையிருக்க வாய்ப்புள்ளது. அவ்வாறு அமதிக்கப்பட்ட பிழை ஏற்படலாம் என்பதற்கு பிரத்தியேகமாக உத்தரவு ஏதும் உள்ளதா என்று எனக்கு தெரியவில்லை. புல எண்கள்.326/36, 326/37, 326/38, 326/39, 326/40 ஆகிய சொத்துக்களுக்கான மொத்த விஸ்தீரணம் 1.5 ஏர்ஸ் ஆகும். புல எண்.326/36 ன் விஸ்தீரணம் 10 சதுர மீட்டர் ஆகும். புல எண்.326/37 ன் விஸ்தீரணம் 40 சதுர மீட்டர் ஆகும். புல எண்.326/38 ன் விஸ்தீரணம் 25 சதுர மீட்டர் ஆகும். புல எண்.326/39 ன் விஸ்தீரணம் 25 சதுர மீட்டர் ஆகும். புல எண்.326/40 ன் விஸ்தீரணம் 50 சதுர மீட்டர் ஆகும். மேற்படி புல எண்களின்மொத்த விஸ்தீரணம் 1520 சதுரடியாகும். புல வரைபடத்தில் மேற்படி புல எண்களில் மொத்த விஸ்தீரணம் 608 சதுரடிக்கு கூடுதலாக வரையப்பட்டுள்ளது என்றால் புல எண் 214/28 ல் இருந்த 1.5 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ள சொத்துதான் தற்போது மேற்படி 5 உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. புல எண் 214/28 ல் கண்ட சொத்து ஆரம்ப காலத்தில் ரயத்து புஞ்சையாக உள்ளது. மேற்படி சொத்து தற்போதும் வருவாய் கணக்கின்படி ரயத்து புஞ்சையாகதான் உள்ளது. புல எண்கள் 326/36 லிருந்து 326/39 வரை உள்ள சொத்துக்கள் 1.5 ஏர்ஸ் விஸ்தீரணமுள்ளது என்றால் கணக்கில் அவ்வாறில்லை.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது**).

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

ஒப்பம்/- நா. சிவபழனி,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.